பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 22 | செவ்வாய்க்கிழமை | 08.10.2024 | அதிர்வு 067

## வேட்பாளர் பட்டியலால் தமிழரசுக்குள் குழப்பம்

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் 06



# தமிழரசின் தலைவர் பொறுப்பை உடன் ஏற்க வேண்டும் சிறீதரன்!

## பதவி விலகிய மாவை கடிதம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள மாவை சேனாதிராஜா, கட்சியின் தலைவர் பொறுப்பை உடன் ஏற்குமாறு கோரி கட்சியின் உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். 07

# போலித் தேசியவாதிகளை அடியோடு நிராகரியுங்கள்!

## முழு ஆதரவையும் முன்னணிக்குத் தமிழ் மக்கள் வழங்க வேண்டும் எனக் கஜேந்திரகுமார் கெஞ்சல்




(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

"தமிழ்த் தேசிய நீக்கம் செய்யும் போலித் தேசியவாதிகளை அடையாளம் கண்டு தமிழ்த் தேசியக் கொள்கையுடன் நேர்மையாகப் பயணிக்கின்ற எமக்கு ஒட்டுமொத்த ஆதரவையும் தமிழ் மக்கள் வழங்க வேண்டும். இதனூடாக நடைபெறப் போகின்ற மாற்றம் என்பது தமிழ்த் தேசியக் கொள்கையுடன் தடம் மாறாமல் 06

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை தேர்வு செய்வதில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பம் சங்குச் சின்னத்தைப் புதிதாக வரித்துக் கொண்டுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குளும் பிரதிபலிக்க – எதிரொலிக்க – தவறவில்லை.



தமிழரசில் இடம் கிடைக்காமல் முரண்பட்டு வெளியேறும் பிரமுகர்களுக்கு சங்குச் சின்னத்தில் இடமளிக்க முயலும் சில அரசியல் தலைவர்களின் நடவடிக்கை, சங்கு கூட்டுக்குள் குழப்பத்தை உருவாக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழரசில் இடம் கிடைக்காமல், கடைசி நேரத்தில் வெளியே வருவோருக்கு, சங்குக் கூட்டணியில் இடம் கொடுத்து, சங்கிற்கான ஆதரவைப் பெருக்கிக் கொள்ள சில அரசியல் தலைவர்கள் திட்டமிட்டாலும், அது சங்கில் போட்டியிடுவதற்காக 06

# அதிக ஆசனங்களை ‘சங்கு’ கைப்பற்றுமாம்

## இப்படி சித்தார்த்தன் நம்பிக்கை



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் என்று அந்தக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ். கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுவதாகத்தான் தீர்மானித்து இருக்கின்றோம். ஆனால், கிழக்கிலே திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ்ச் சமூகம் பலவீனமான நிலையில் இருக்கின்றது.

அதனால் அங்கு தமிழர் தரப்பில் ஆக்க் குறைந்து ஓர் ஆசனம் எடுப்பதென்றால் கூட தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றாகக் கேட்டால்தான் சாத்தியமாகும் என்ற நிலைமை உள்ளது.

ஆகையினால், இந்த இரு மாவட்டங்களிலும் உள்ள நிலைமைகளுக்கு ஏற்ற வகையில்தான் நாங்கள் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிள்ளது. இதன் காரணமாகத்தான் தமிழரசுக் கட்சியுடன் நாங்கள் தொடர்ந்தும் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இதற்கமைய அவர்களுக்கும் எங்களுக்கும் நடைபெறும் பேச்சுக்களின் நிமித்தம் திருகோணமலையில் தமிழரசுக் கட்சி சின்னத்திலும், அம்பாறையில் சங்கு சின்னத்திலும் போட்டியிடுவது தொடர்பில் கருத்தளவில் ஒத்துக்கொண்டு இருக்கின்றோம்.

ஏனெனில் இந்த இரண்டு மாவட்டங்களிலும் எங்கள் பிரதிநிதித்துவம் இழக்கின்ற நிலைமை உள்ளது. ஆகவே, தமிழரசுக் கட்சியும் இதை உணர்ந்து கொண்டு திருகோணமலையில் வீட்டிலும், அம்பாறையில் சங்கிலும் போட்டியிடுவதன் மூலம் ஆகக் குறைந்தது நாங்கள் ஒவ்வொரு பிரதிநிதித்துவத்தையாவது உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். அதை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும். அந்தவகையில் தொடர்ந்தும் நாங்கள் முயற்சிப்போம்.

இதேவேளை, கொழும்பில் போட்டியிடுவது தொடர்பில் நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அது சாத்தியமாகும் பட்சத்தில் நிச்சயமாக நாம் அங்கும் போட்டியிடுவோம்.” – என்றார்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து பதவி விலகினார் பாரத் அருள்சாமி



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சகல பொறுப்புக்களிலிருந்தும் பாரத் அருள்சாமி விலகியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை, நேற்று மாலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கமைய, பாரத் அருள்சாமி, கட்சியின் உப தலைவர் பதவியிலிருந்தும், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

கட்சியின் தீர்மானத்திற்கு அமைவாக மக்களின் எதிர்பார்ப்புக்கு அப்பால் தம்மால் செயல்பட இயலாது என்பதால், தாம் இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனின் சர்வாதிகார ஆட்சிதான் நடக்கின்றது

## தனக்குத் துதி பாடுபவர்களைப் பெண் வேட்பாளர்களாக அவர் நியமித்துள்ளார் என்று கட்சியின் மகளிர் அணி சீற்றம்




(எஸ்.நிதர்ஷன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெண் வேட்பாளர் தெரிவில் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ள கட்சியின் மகளிர் அணியினர், கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளார்கள்.

தமிழரசுக் கட்சியின்மகளிர் அணியின் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து யாழ். ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை ஊடக சந்திப்பை நடத்தினர்.

இதன்போது கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணித் தலைவி மதனி நெல்சன் தெரிவித்ததாவது:-

“நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள பெண் வேட்பாளர் தெரிவில் கட்சியின் மகளிர் அணிக்குக் கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

உண்மையில் எதற்காக இவ்வாறான தெரிவுகளைச் செய்தார்கள் என்ற சந்தேகமும் கேள்வியும் இருக்கின்றது. இந்தப் பெண் வேட்பாளர் தெரிவு சர்வாதிகாரமான முறையிலே நடைபெற்றிருக்கின்றது. இதனால் கட்சியில் உள்ள பெண்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலில் யாழில் போட்டியிடுவதற்காக மகளிர் அணியில் இருக்கின்ற ஐந்து பேர் இரண்டு கிழமைக்கு முன்னதாகவே விண்ணப்பித்து இருந்தனர்.

ஆனால், வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட சுமந்திரன் பெண்கள் விண்ணப்பிக்கவில்லை என்றும், காடுகள், மலைகள், மேடுகள், பள்ளங்கள் எனப் பல இடங்களிலும் பெண்களைத் தேடுவதாகவும் தனது பாணியில் கிண்டலாகச் சொல்லியிருந்தார்.

ஆனால், 5 ஆம் திகதி பெண்கள் விண்ணப்பிக்கவில்லை என்றவர் மறுநாள் 6 ஆம் திகதி இரண்டு பெண்கள் விண்ணப்பித்து அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று கூறுகின்றார். உண்மையில் ஓரிரு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களை மறைத்து யாரும் விண்ணப்பிக்கவில்லை எனச் சொன்னவர் திடீரென இருவர் விண்ணப்பித்துள்ளதாகவும், அவர்களைத் தெரிவு செய்துள்ளதாகவும் கூறுகின்றார்.

ஆகவே, எதற்காக அவர் உண்மையைச் சொல்லாமல் பொய் சொல்லுகின்றார். இவ்வாறாக அவரின் பொய்களைக் கேட்கவோ, சர்வாதிகாரத்துடன் அவர் செயற்பட்டு வருவதையோ அனுமதிக்க நாங்கள் தயாராக இல்லை.

எங்களில் பல பேர் போட்டியிட விண்ணப்பித்து இருக்கையில் அதனை மறைத்துவிட்டு தனக்குத் துதிபாடுபவர்களை வேட்பாளர்களாகச் சுமந்திரன் நிறுத்தியுள்ளார். ஆக முதலில் விண்ணப்பித்த நாங்கள் யார்? இப்போது சுமந்திரன் தெரிவு செய்த இருவரும் யார்? எந்த அடிப்படையில் அவர்களைச் சுமந்திரன் தெரிவு செய்தார்.?

ஆக மொத்தத்தில் தனக்குத் துதி பாடுபவர்களைத் தானே நிறுத்திவிட்டு இப்போது ஆளுமை மிக்க பெண்கள் என அவர் புருடா விடுகின்றார். ஆக இந்தப் பருப்பு எல்லாம இனி வேகாது.

வெறுமனே அடாவடித்தனமாகச் சர்வாதிகாரத்துடன் தான் செயற்படுவதால் மற்றவர்களை முட்டாள்கள், மடையர்கள் எனச் சுமந்திரன் நினைக்கக்கூடாது. எல்லாத்துக்கும் தனித்து ஒற்றையாளாக முடிவெடுகின்ற அவரது ஆட்டம் இனி முடிவுக்கு வரும்.

இந்த இரு பெண் வேட்பாளர்களின் தெரிவு என்பது தன்னிச்சையாக சுமந்திரனால் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இதற்கு யாருடைய ஒப்புதலும் இன்றி தனக்குத் துதிபாடுபவர்களைத் தனது வாக்கு வங்கிக்காக அவர் தெரிவு செய்துள்ளார்.

எங்கள் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக இந்த இருவரையும் சுமந்திரன் நியமித்துள்ளார். முன்னர் விண்ணப்பித்தவர்களைப் புறந்தள்ளி தனக்குத் துதிபாடிக் கொண்டு தன்னோடு பயணிக்கக்கூடிய இரண்டு கொத்தடிமைகளை வேட்பாளர்களாகச் சுமந்திரன் நியமித்துள்ளார்.” – என்றார்.

தமிழரசுக் கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் ரஜனி ஜெகப்பிரகாஷ், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியைச் சேர்ந்த விமலேஸ்வரி ஆகியோரும் பெண் வேட்பாளர் நியமனத்துக்கு எதிராகக் கருத்து வெளியிட்டனர்.

தமிழரசுக் கட்சிக்குள் தற்போது சுமந்திரனின் சர்வாதிகார ஆட்சிதான் நடக்கின்றது என்றும் அவர்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

# தமிழ், சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்களை களமிறக்கிக் கொழும்பில் ஈ.பி.டி.பி. போட்டி

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

கொழும்பு மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்களை முன்னிறுத்தியும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடுவோம் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்பு மனுவை நேற்று திங்கட்கிழமை தாக்கல் செய்தபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளோம். விசேடமாக கொழும்பில் எங்களுடைய ஆதரவாளர்கள், பொதுமக்கள் இம்முறை போட்டியிடுமாறு கோரிக்கையை முன்வைத்தமையால் நாங்கள் இம்முறை கொழும்பிலும் போட்டியிடவுள்ளோம்.

கொழும்பிலே தமிழ், சிங்கள, முஸ்லிம் வேட்பாளர்களை முன்னிறுத்திப் போட்டியிடவுள்ளோம். எல்லா இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக எங்கள் வேட்பாளர் தெரிவு அமையும்.



புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடுமாறும் அப் பிரதேச மக்கள் கேட்டிருந்தார்கள். எனினும், குறுகிய காலத்துக்குள் போட்டியிட முடியாது என்பதால் நாம் இம்முறை அங்கு போட்டியிடவில்லை.

"மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!!" என்ற எங்களுடைய இலக்கை அடைவதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எங்களுக்கு அமோக வாக்களித்து எங்களை வெற்றி பெறச் செய்வார்கள் என நம்புகின்றேன்." – என்றார்.

## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல்:

# தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச்சீட்டு அனுப்பி வைப்பு

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலின் தபால் மூல வாக்களிப்பிற்கான வாக்குச்சீட்டுகள் அடங்கிய பாதுகாப்பு பொதிகள் நேற்று தபாலில் அனுப்பி வைக்கப்பட்டன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேற்படி பொதிகள் அரச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி தினத்தில் தமது வாக்குகளை செலுத்தமுடியாத தபால் மூல வாக்காளர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி தமது அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் வாக்குகளை செலுத்துவதற்கான வாய்ப்பு



வழங்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி தபால் அலுவலகங்களிடம் கையளிக்கப்படவுள்ளதுடன், அவை எதிர்வரும் 17 முதல் 20 ஆம் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# வினாத்தாள் கசிவு விவகாரம் இருவருக்கு விளக்கமறியல்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பாக வினாத்தாளின் சில வினாக்கள் கசிந்த விடயம் தொடர்பில் கைது செய்யப்பட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் மற்றும் அலவ்வ பிரதேச மேலதிக வகுப்பு ஆசிரியர் ஆகியோர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று கடுவலை நீதவான் ச்சானிமா விஜய பண்டார முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

இதன்படி அவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கைது செய்யப்பட்ட மேலதிக வகுப்பு ஆசிரியரின் கையடக்கத் தொலைபேசி தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகக் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

# தொடரும் மழையுடனான காலநிலை; 4 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்



நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 4 மாவட்டங்களுக்குத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்டை பிரதேச செயலக பிரிவுக்கும் காலி மாவட்டத்தின் நியகம பிரதேச செயலக பிரிவுக்கும் 2 ஆம் கட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட பிரதேச செயலக பிரிவுக்கும், மாத்தறை மாவட்டத்தின் பிடபெத்தர பிரதேச செயலகப் பிரிவுக்கும், 1 ஆம் கட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்கனவே இலக்கு வைத்துத் தயாராக இருந்து, காய் நகர்த்தி வரும் வேறு சிலருக்கு பெரும் ஆப்பாக வந்து இறங்கி இருக்கிறது.

சங்கு கூட்டுக்கு கிடைக்கக்கூடிய ஓரிரு இடங்களைத் தட்டிப்பிடித்து நாடாளுமன்றத்திற்குப் போய்விடலாம் என்ற கனவில் இருந்தவர்களை, 'காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன' கதையாக, தமிழரசிலிருந்து திடீரென வந்து வேட்பாளர் இடத்தைப் பிடிப்போர் அள்ளிச் சென்று விடுவர் என்ற பயம் அவர்களைப் பீடித்திருப்பதாகத் தெரிகிறது.

அது மட்டுமல்லாமல், மேற்படி சங்குக் கூட்டணியில் ஏற்கனவே ஐந்து கட்சிகள் இருக்கின்றன, அவை ஒவ்வொன்றும் யாழ் மாவட்டத்தில் தலா 2 வேட்பாளர்களைக் கேட்டும் பெற முடியாத போட்டி நெருக்கடி உள்ளது. இந்தச் சூழலில் புதிதாக தமிழரசில் இருந்து வேட்பாளர் தெரிவு இடம் கிடைக்காத அதிருப்தியோடு அணுகுவோருக்கு எப்படி இடம் வழங்குவது என்ற சிக்கல் சங்குக் கூட்டுக்குள்.

எது, எப்படியாயினும் தமிழரசுக்குள் ஏற்பட்டுள்ள வேட்பாளர் தெரிவு போட்டி சங்குக்கு மவுசை – கிராக்கியை – அதிகரிக்கச் செய்திருக்கிறது என்பது உண்மை.

வேட்பாளர் தெரிவு விடயத்தை சுமந்திரன் தரப்பு இவ்வளவு திட்டமிட்டு, எதிர்பார்த்துச் செய்திருக்குமோ தெரியாது. ஆனாலும் கே.வி.தவராசா வெளியேற்றம், மாவை பதவி துறப்பு, அவரது சம்பந்தி சசிகலா தமிழரசிலிருந்து அணிமாற்றம், தொடர்ந்தும் கட்சிக்குள் தமக்குத் தலையிடி, எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்த பலர் வெளியேறும் சூழல்... என்பவை எல்லாம் சுமந்திரன் தரப்புக்கு ஆச்சரியம் தருவனவாக இருக்கும். தங்கள் நகர்வால் ஒரு பந்தில் இப்படிப் பல விக்கெட்டுகள் விழும் என்று சுமந்திரனே கற்பனை பண்ணி இருப்பாரோ என்னவோ தெரியவில்லை.

ஆனாலும் இவ்வளவும் நடக்கும் போதும் 'ஓடுமீன் ஓடி உறு மீன் வரும் வரை காத்திருக்கும் கொக்குப் போல' இப்போது சிறிதரன் ஆறக் காத்திருக்கின்றார்.

களதார்த்தம் தமக்குச் சாதகமாக இல்லை என்ற சூழல் அவருக்கு புரியும். மக்கள் வாக்குகள் மூலம் தன்னைப் பலப்படுத்திக் காட்டுவதுதான் இப்போது தனக்கான மார்க்கம் என்பதை அவர் புரிந்து கொண்டிருக்கின்றார் என்பது தெரிகிறது.

மாவை சேனாதிராஜாவின் தலைமை பதவி ராஜினாமா கடிதம் தமக்கு முகவரி இடப்பட்டு, தம்மிடம் சேர்க்கப்பட்ட கையோடு நேற்று உடனடியாகவே மாவை சேனாதிராஜாவை அவரது இல்லத்துக்குத் தேடிச் சென்று சந்தித்து, நிலைமையை சமூகமாக்கி, மாவை சேனாதிராஜாவைப் பதவியில் தொடரச் செய்யும் முயற்சியில் சிறிதரன் ஈடுபட்டார் எனத் தெரிகிறது.

ஆயினும் அந்த முயற்சி பலன் அளிக்கும் சூழல் தென்படவில்லை.

கட்சிக்குள் இத்தனை குழப்பம், இத்தனை களேபரம் நேர்ந்தாலும், கட்சியை விட்டு நகராமல் நின்று பிடித்து, கட்சி மீதான தனது பிடிப்பைக் கட்சி உறுப்பினர்களுக்கு உணர்த்துவதுதான் தனது பிரதான கடமை என்று கருதி பொறுமை காக்கிறார் சிறிதரன் என்றே தோன்றுகிறது.

கட்சிக்குள் எல்லை மீறி நடக்கும் நிழல் யுத்தத்தின் விளைவுகள் இன்னும் ஐந்து வாரங்களுக்குள் தேர்தல் முடியும் போது தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

## வேட்பாளர் பட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தின் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்கள் அக்கட்சியின் தேர்தல் நியமனக் குழுவால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது.

அதன்படி யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர்களாக சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சி.சி.இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இம்மானுவல் ஆர்னோல்ட், கிருஷ்ணவேணி சிறீதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இருப்பினும் இந்தப் பெயர்ப்பட்டியலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் பெயர்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இதனையடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தமிழரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு அறிவித்தார்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அடாவடித்தனமாகப் பல்வேறு குளறுபடிகளைச் செய்து தனக்கு வேண்டியவர்களுக்கு நியமனத்தைக் கொடுத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் பாரியாரும் தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி உறுப்பினருமான சசிகலா ரவிராஜ், கட்சியிலிருந்து நேற்று திங்கட்கிழமை விலகியதுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளராக வேட்புமனுவில் கையெழுத்தும் இட்டார்.

தவராசா மற்றும் சசிகலா மாத்திரமன்றி கட்சியின் மேலும் சில சிரேஷ்ட உறுப்பினர்களும் இந்த வேட்பாளர் பட்டியல் தொடர்பில் கடும் அதிருப்தியடைந்திருந்த நிலையில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா நேற்று திங்கட்கிழமை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

இந்நிலையில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலில், மக்கள் மத்தியில் செல்வாக்குடைய சிரேஷ்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஏன் உள்வாங்கப்படவில்லை என்றும், அதற்குரிய நியாயமான காரணங்கள் என்ன என்றும் கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கத்திடம் வினவிய போது அதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

"இந்தத் தீர்மானம் கட்சியின் தேர்தல் நியமனக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் வரும்போது, அவற்றை ஆராய்ந்து அதில் பொருத்தமான விண்ணப்பங்களை மாத்திரம் தெரிவுசெய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும்.

எனவே, இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான செயன்முறையொன்று நியமனக் குழுவால் வகுக்கப்பட்டு, அதற்கு அமைவாகவே வேட்பாளர் தெரிவு இடம்பெற்றது.

எனவே, இவ்வாறானதொரு பின்னணியில் சிலர் ஏன் தெரிவு செய்யப்படவில்லை என்பதற்குத் தனித்தனியாகக் காரணம் கூறுவது சாத்தியமற்றதாகும்." – என்றார்.

## போலித் தேசியவாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணிக்கிற எங்களுக்கான அங்கீகாரமாகப் பார்க்கின்றோம்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்று திங்கட்கிழமை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயக நிலப்பரப்பிலுள்ள அனைத்து இடங்களிலும் நாங்கள் போட்டியிடவுள்ளோம். அதன் முதல் கட்டமாக இங்கும் அதனைத் தொடர்ந்து ஏனைய இடங்களிலும் வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளோம்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்தத் தேர்தல் ஒரு திருப்புமுனையாகும். அதுவும் எமது அமைப்பின் அரசியலுக்கு மட்டுமல்லாது தமிழ்த் தேசிய அரசியலுக்கும் ஒரு திருப்பு முனையாகவுள்ளது.

தமிழர் தரப்பில் உள்ளவர்கள் 2009 இற்குப் பின்னர் தமிழ்த் தேசியத்தை நீக்கம் செய்யும் அரசியலையே நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னெடுத்து வந்தனர்.

ஆனால், தமிழ்த் தேசியத்தை நோக்கிப் பயணிக்கின்ற ஒரேயொரு தரப்பு நாங்கள் மட்டும்தான். ஆகையினால் தமிழ்த் தேசியத்துக்கு மக்கள் வழங்குகின்ற ஆணையாக இந்தத் தேர்தலைப் பார்க்கின்றோம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை அரசியலில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதேபோன்றே தமிழர் தாயகத்திலும் பெரிய மாற்றம் நடக்குமான எதிர்பார்க்கின்றோம்.

குறிப்பாக கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்தைப் பேசிக் கொண்டு அதற்கு மாறாகச் செயற்பட்டவர்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து தமிழ்த் தேசியத்துடன் பயணிக்கின்ற எமக்கு ஆணையைக் கொடுக்கக் கூடிய தேர்தலாகப் பார்க்கின்றோம்.

எமது அமைப்பினுடைய நேர்மையான அரசியல் நிலைப்பாட்டை மக்களிடத்தே கொண்டு செல்வதற்குப் பல்வேறு சவால்கள் இருந்த போதிலும் அதனையெல்லாம் தாண்டியும் மக்களிடத்தே அதனை நாம் கொண்டு சென்றிருக்கின்றோம்.

இதனால் போலித் தேசியவாதிகளை மக்களும் இனங்கண்டுள்ள நிலையில் தடம்மாற கொள்கையுடன் நேர்மையான அரசியலை முன்னெடுக்கின்ற எமது அமைப்புக்கு ஒட்டுமொத்த ஆதரவையும் வழங்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

07

# தாமரை கோபுரத்திலிருந்து தவறிவிழுந்து மாணவி பலி



கொழும்பு தாமரை கோபுரத்தின் பார்வையாளர் கூடத்திலிருந்து தவறி வீழ்ந்து மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி பயின்ற 18 முதல் 20 வயது மதிக்கத்தக்க மாணவி ஒருவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.

மாணவி உயிரிழந்தமை தொடர்பில், கொழும்பு தாமரை கோபுரத்தின் சீ.சீ.ரீ.வி காணொலிகளின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பொதுத் தேர்தல் வேட்பாளர்கள் சொத்து விபரங்கள் வேண்டும்

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு




2024 பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல்செய்யும் அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களைக் கையளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினம் வரையிலான தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களைக் கையளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசியப்பட்டியல் வேட்பாளர்களும் தமது வேட்புமனுக்களுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களைக் கையளிக்க வேண்டுமென ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தமது வேட்புமனுக்களுடன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களைக் கையளிக்கத் தவறுகின்றமை தண்டனைக்குரிய குற்றமென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தமிழரசின் தலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மாவை சோமசுந்தரம் சேனாதிராஜா ஆகிய நான் இதுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து செயற்பட்டு வந்திருக்கின்றேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு 2024 ஜனவரி 21ஆம் திகதி நடைபெற்றபோது பொதுக்குழுவில் தாங்கள் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தீர்கள்.

தாங்கள் அந்தவகையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பை இன்னும் ஏற்கவில்லை. அதனால் நான் தொடர்ந்தும் கட்சியின் தலைவராகச் செயலாற்றி வந்துள்ளேன்.

அந்தப் பொறுப்பை உடன் ஏற்றுத் தலைவராகச் செயற்படுமாறு அன்றிலிருந்து பல தடவைகள் வற்புறுத்தி வந்துள்ளேன்.

2024 ஒக்டோபர் 7ஆம் திகதியிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பில் இருந்து விலகியிருக்கத் தீர்மானித்துள்ளேன் என்பதனை இந்தக் கடிதம் மூலம் அறியத் தருகின்றேன்.

எனவே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் பொறுப்பை உடன் ஏற்று நிறைவேற்றிச் செயற்படுமாறு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## போலித் தேசியவாதி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனூடாக நடைபெறப் போகின்ற மாற்றம் என்பது தமிழ்த் தேசிய கொள்கையுடன் நேர்மையாகவும் உண்மையாகவும் பயணிக்கின்ற எங்களுக்கான அங்கீகாரமாகப் பார்க்கின்றோம்.

எனவே, இன்றைக்கு மக்களும் உண்மைகளை உணர்ந்துள்ள நிலையில் நிச்சயம் மாற்றமொன்று ஏற்படும். அந்த மாற்றத்தின் ஊடாக தமிழர் தேசத்தில் அமோக வெற்றியுடன் நாம் மீண்டும் சந்திப்போம்." - என்றார்.



# ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் அநுரகுமார திஸநாயக்கவுடன் சந்திப்பு

இலங்கையின் சுற்றுலா, வலுசக்தி மற்றும் சிறு தொழில் துறைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோவை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரையில் முன்னெடுக்கபட்டுவரும் அனைத்து ஒப்பந்தங்களும் அவ்வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையில் வலுவச்தி மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேம்படுத்த தேவையான நிதி உதவிகளை வழங்கவும், நிதித் துறையின் முன்னேற்றத்துக்கு தேவையான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான முன்னெடுப்புக்களின் பிரதானி சொல்பொத் மெம்பேடோவா, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.பி. அபேசேகர, பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ, சிரேஷ்ட பொருளாதார அதிகாரிகளான ஹஷிதா விக்ரமசிங்க மற்றும் லக்ஷினி பெர்னாண்டோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாவையின் அபத்தம்

'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன்' என்பார்கள்.

அந்த மாதிரி இதுவரை காலமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்து, கட்சியை உண்டு இல்லை என்று ஆக்கிய மாவை சேனாதிராஜா இப்போது கட்சியின் தலைமைப் பதவியை விட்டு இறங்கும் போதும் குசும்புத்தனமாகக் குழப்பம் பண்ணி விட்டுத்தான் போவேன் என்று அடம் பிடிப்பவர் மாதிரி நடந்து கொள்கின்றார். இதுதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் துரதிஷ்டம்.

ஐம்பது வருடங்களுக்கு மேல் அரசியலில் நேரடியாக சம்பந்தப்பட்டு, நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மாவை சேனாதிராஜாவுக்குக் கட்சித் தலைமை பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வது எப்படி என்ற முறைமை கூட இன்னும் தெரியாமல் இருப்பது வேடிக்கையாகும். இடையில் ஒரேயொரு தேசிய மாநாட்டை நடத்திக் கொண்டு, பத்து ஆண்டுகளுக்கு மேல் முறையற்ற வகையில் கட்சித் தலைமைப் பதவியில் தொடர்பவர் மாவை சேனாதிராஜா.

தாம் தலைமைப் பதவியில் நீடிப்பதற்காகக் கட்சியின் மாநாட்டை நடத்தாமல் இழுத்தடித்து வந்த மாவை சேனாதிராஜா, கடைசியில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டையும் குழப்புவதற்கு வழி பண்ணினார். அங்கத்துவத் தகுதி இல்லாதவர்களை எல்லாம் தலைவர் என்ற தமது அதிகாரத்தைப் பயன்படுத்திப்பொதுக்குழுவுக்குக்கூட்டிவந்து,பொதுக் குழுவை பெரும் குழப்பத்துக்கு மத்தியில் நடத்தக் காரணமாக இருந்தவர் மாவை சேனாதிராஜாதான்.

கட்சியின் பொதுக்குழுவுக்கு சமுகம் தர முடியாதவர்களை எல்லாம் தலைவர் என்ற தன் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி பொதுக்குழுக் கூட்டத்துக்குள் பிரசன்னமாக வைத்த மாவை சேனாதிராஜாவின் நடவடிக்கை காரணமாக அந்த விடயம் நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது.

அதன் காரணமாக அந்த தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட சிறிதரனை தலைவராகச் செயல்படுவதற்கு நீதிமன்றம் அனுமதிக்கவில்லை. தடை உத்தரவு வழங்கியிருக்கின்றது.

அப்படி இருக்க இப்போது தாம் தலைமைப் பதவியை ராஜினாமாச் செய்கின்றார் என்று கூறி, அந்தத் தலைமைப் பதவியை ஏற்று நடத்துமாறு அவர் சிறிதரனைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார். நீதிமன்றத்தின் தடை காரணமாக அந்தப் பதவியை சிறிதரன் வகிக்க முடியாது என்பது கூட மாவை சேனாதிராஜாவுக்குத் தெரியவில்லை.

நீதிமன்றத்தில் வழக்கு இருக்கத்தக்கதாக - சிறிதரன் தலைவராகப் பதவி வகிப்பதற்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியிருக்கத்தக்கதாக - அவரைத் தலைமைப் பதவியை ஏற்கும்படி வழக்கின் பிரதிவாதிகளில் ஒருவரான மாவை சேனாதிராஜா தமது ராஜினாமாக் கடிதத்தில் கோருவது நீதிமன்ற அவமதிப்பு விவகாரமாக நிச்சயமாக வரைவிலக்கணப் படுத்தப்படும் என்பது உறுதி.

பொதுவாக ராஜினாமாக் கடிதம் என்றால், அது கட்சியின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். இதுவரை காலமும் கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜாவுக்கு அது கூட தெரியவில்லை.

தலைவராக செயல்படுவதற்கு நீதிமன்றம் சிறிதரனுக்கு இடைக்கால உத்தரவு வழங்கியிருக்கையில் அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மாவை சேனாதிராஜாவே சிறிதரனை தலைமைப் பதவியை ஏற்கும்படி கூறுவது - கோருவது - நீதிமன்ற அவமதிப்பு குற்றமாக நிச்சயம் அர்த்த படுத்தப்பட முடியும்.

ஏற்கனவே முன்னுக்குப் பின் முரணான நடவடிக்கைகள் - சணம் பித்தம், சணம் வாதம் போக்கு செயற்பாடுகள் - அர்த்தமற்ற, குறைகள் நிறைந்த, முரண்பாடான பேச்சுக்கள் போன்றவை காரணமாக தன்னுள் குழப்பம் மிகுந்தவர் மாவை சேனாதிராஜா என்று அண்மைக்காலமாக அவர் பெயர் எடுத்தவர்.

அந்தப் பெயரை ஊர்ஜிதப்படுத்துவது போல இப்போது தமது பதவி விலகல் கடிதத்தையும் முறையற்ற தரப்புக்கு அனுப்பி இருக்கிறார் அவர்.

மாவை சேனாதிராஜா தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாயின், அதற்கான கடிதம் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். செயலாளருக்கே அது முகவரியிடப்பட்டிருக்க வேண்டும்.

அது இந்த விடயத்தில் நடைபெறவே இல்லை.

தமது ராஜினாமாக் கடிதத்தை, நீதிமன்றத் தடை உத்தரவினால் தலைவர் பதவியை ஏற்க முடியாமல் இருக்கும் சிறிதரனுக்கு மாவை சேனாதிராஜா அனுப்பி வைத்தமை அபத்தச் செயற்பாடின்றி வேறில்லை.






# இனி வரும் காலங்களில் கவனம் தேவை; மெரினா சம்பவம் குறித்து விஜய் கருத்து

சென்னை மெரினாவில் நடைபெற்ற விமான சாகச நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் இனி வரும் காலங்களில் அரசு கவனத்துடன் செயல்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"சென்னையில் இந்திய விமானப் படை சார்பில், மெரினா கடற்கரையில் நடைபெற்ற சாகச நிகழ்ச்சியின் போது 5 பேர் உயிரிழந்த நிகழ்வு வேதனையளிக்கிறது. அவர்களது குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிகழ்ச்சியின் போது, அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவை மீது அரசு போதுமான கவனம் செலுத்தவில்லை என்று நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொதுமக்கள், தங்கள் வேதனையை வெளிப்படுத்திய செய்திகள் ஊடகங்களில் வந்துள்ளன.

இப்படி மக்கள் அதிக அளவில் கூடுகிற இடங்களில் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைக்கான வசதிகளையும் பாதுகாப்பையும் திறம்படச் செயல்படுத்துவதில், இனி வரும் காலங்களில் கவனம் செலுத்த வேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பெண் மருத்துவர் கொலை வழக்கு: பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்




தங்கள் கோரிக்கைகளை அரசு முழுமையாக நிறைவேற்றும் வரையில் போராட்டம் தொடரும் என்று கொல்கத்தா பயிற்சி மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்தப் படுகொலைக்கு நீதி கேட்டு பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்து வெள்ளிக்கிழமை, பயிற்சி மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர். அதேசமயம், 24 மணி நேரத்துக்குள் தங்கள் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால், சாகும்வரையில் உண்ணாரவிதப் போராட்டம் மேற்கொள்ளோம் என்று எச்சரித்தனர்.

இதைத் தொடர்ந்து அவர்கள் உள்ளிருப்பு போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

கொல்கத்தா நகரில் எஸ்பிளனேட் பகுதியில் பயிற்சி மருத்துவர்கள் திரளாக கூடி போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். கொல்கத்தாவில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதற்கு மத்தியிலும் அவர்கள், கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் உள்ளிருப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல், அதற்கான பிரதிநிதிகளை முறையாக தேர்வு செய்தல், பணிக்குழு அமைத்தல் உட்பட 10 கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

அரசு தங்களது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றும் வரையில் தங்கள் போராட்டம்தொடரும் என்று தெரிவித்து உள்ளனர்.





# இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது ஹெஸ்புல்லா வான்வழித் தாக்குதல்



இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது ஹெஸ்புல்லா அமைப்பு வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கு லெபனானில் உள்ள பூங்கா ஒன்றில் இஸ்ரேலிய இராணுவத்தினர் கூடியிருந்த போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.














# பதவியேற்ற சில நாள்களில் மெக்சிகோ மேயர் படுகொலை

தெற்கு மெக்சிகோவின் சில்பான்சிங்கோ நகர மேயர் அலெஜான்ட்ரோ ஆர்கோஸ் கொலை செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

பதவியேற்று ஒரு வாரத்திற்குள் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வன்முறையால் பாதிக்கப்பட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளில் தொடர்ச்சியாக அரசியல்வாதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

மெக்சிகோவில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற மேயர் தேர்தல்களுக்கு முன்னதாக, சுமார் ஆறு வேட்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதன்முறை இஸ்ரேலின் துறைமுக நகரத்தில் தாக்குதல் நடத்தியது ஹெஸ்புல்லா அமைப்பு!




ஹெஸ்புல்லா அமைப்பு முதன்முறையாக இஸ்ரேலின் துறைமுக நகரமான ஹைஃபா மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் நூற்றுக்கணக்கான ரொக்கட் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஹைஃபாவில் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய இராணுவம் லெபனான் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தியமையினால் பெய்ரூட்டில் மீண்டும் ஒரு வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களில் லெபனானின் தலைநகர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உலக வங்கியுடன் 200 மில்லியன் டொலர் நிதி வசதிக்கான உடன்படிக்கை கைச்சாத்து

உலக வங்கியுடன் மேலதிக 200 மில்லியன் டொலர் நிதி வசதிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பிற்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

நிதியமைச்சின் மேலதிக செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் மறுசீரமைப்பு, நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை சுமூக நிலைக்கு கொண்டு வருவதற்கான அபிவிருத்தி கொள்கைகளுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த நிதி உதவி இலங்கைக்கு கிடைத்துள்ளது.

இந்த இரு வருட வேலைத்திட்டம், வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீதான தாக்கத்தை குறைத்து முழுமையான பொருளாதார நிலைத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் 2023 ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன், பிரதான மூன்று துறைகளின் கீழ் ஏழு வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர், 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும்.

உலக வங்கியின் இந்த நிதி உதவி இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நெருக்கடி மீண்டும் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தீர்மானமிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க உதவும் என்பதோடு, நிலையானதும் போட்டித்தன்மை மிக்கதுமான சூழலை உருவாக்கும் என்றும் நம்பப்படுவதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.





# லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க இராஜினாமா

இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் கையளித்துள்ளார் என ஜனாதிபதி சட்டத்தரணி உதித இகலஹேவா நேற்று உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

லஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனத்திற்கு எதிராக ஊடகவியலாளர் ருவினி பொன்சேகா மற்றும் ட்ரான்ஸ்ஃபெரன்ஸி இன்டர்நேஷனல் நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உதித இகலஹேவா இவ்விடயத்தை குறிப்பிட்டார்.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீதி பத்மன் சுரசேன, ஜனக் டி சில்வா மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவின் பிரதிவாதிகளாக லஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிலர் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின்பணிப்பாளர்நாயகம்கனிஷ்கவிஜயரத்னவின் நியமனம், சட்டத்திற்கு முரணான வகையிலும் அரசியலமைப்பிற்கு முரணான வகையிலும் அமைந்துள்ளதால் அந்த நியமனத்தை இரத்து செய்யுமாறு கோரி மனுதாரர்கள் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

தமது சேவைபெறுநர் மீண்டும் நீதிமன்ற சேவையில் இணைந்து கொள்வதற்கு ஆர்வமாக உள்ளதால் தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார் என லஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உதித இகலஹேவா நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.




இந்த நியமனத்தினால் தமது சேவைபெறுநர்கள் உள்ளிட்ட நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணிகள் எடுத்துரைத்தனர்.

இரு தரப்பு விடயங்களையும் ஆராய்ந்த நீதிமன்றம் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கியது.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான விரான் கொரயா மற்றும் சாலிய பீரிஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி விராஜ் தயாரத்ன ஆஜராகினர்.

# தேங்காய் விளைச்சல் குறைவடைந்துள்ளது





கிளிநொச்சி மாவட்டத்தில் தேங்காய் விளைச்சல் குறைவடைந்துள்ளது.

தென்னை மரங்களில் பரவிவரும் வெண்ணிற ஈ தாக்கம் மற்றும் கடந்த சில நாள்களாக நிலவும் வறட்சியுடனான வானிலை காரணமாக விளைச்சல் குறைவடைந்துள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தற்பொழுது சந்தையில் தேங்காய் விலை அதிகரித்துள்ளது.

சில பகுதிகளில் தேங்காய் ஒன்று 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

# முட்டை விலை அதிகரிப்பிற்கு இடைத்தரகர்கதான் காரணம்

இடைத்தரகர்களின் முறையற்ற செயற்பாடு காரணமாகவே, நாட்டில் மீண்டும் முட்டை விலை அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த வாரத்தில் 28 முதல் 32 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை தற்போது 40 ரூபாயாக மீண்டும் அதிகரித்துள்ளது.

இடைத்தரகர்கள் முட்டைகளை சட்டவிரோதமாகப் பதுக்கி, முட்டைகளுக்கான செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதனாலேயே சந்தையில் இவ்வாறு விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ஆர்.எம் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பண்ணைகளில் குறைந்த விலைக்கே முட்டைகளைக் கொள்வனவு செய்கின்றார்கள். அதனை சந்தைக்கு 35 ரூபாவுக்குக் குறைந்த மட்டத்திலாவது விற்பனை செய்ய வேண்டும்.



எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் ஆர்.எம் சரத் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -08.10.2024




இன்று உங்கள் விருப்பத்திற்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்கள் திடமான மனது மற்றும் உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பருவநிலை மற்றும் ஒவ்வாமை காரணமாக தொண்டை சம்பந்தமான உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று மனதில் பதட்டங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பட்ட நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமான்வரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. இழப்புகளைத் தவிர்க்க பணத்தை பாதுகாக்க வேண்டும்.

பதட்டம் மற்றும் அதிகரிக்கும் பணிகள் காரணமாக தலைவலி பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவை பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவிற்கான வாய்ப்பு குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் அல்லது தொடை வலி ஏற்படலாம்.ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சாதகமான அல்லது மகிழ்ச்சியான நாளாக அமையாது.

பணிகளில் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணியில் கவனம் தேவை. இது உங்கள் நலனை மேம்படுத்த வழிகாட்டும்.

உங்கள் மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதத்தில் நீங்கள் ஈடுபடலாம். இது உறவின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை ஆரோக்கியமாக காணப்படாது. செலவுகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும்.

தாயின் ஆரோக்கிய குறைபாடு காரணமாக பணம் செலவு செய்ய நேரிடலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மிகவும் துடிப்பான நாள். இன்று வெற்றிக்கு அடிகோலும் நாள். சுய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுப்பீர்கள்.

பணிகளை குறித்த காலத்திற்குள் முடிப்பீர்கள். நீங்கள் சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உங்கள் முயற்சிக்கான பாராட்டைப் பொறுவீர்கள்.

உங்கள் துணையிடம் சரியான நெறிமுறையை பின்பற்றுவீர்கள். அதன் காரணமாக அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் தைரியமான மனநிலை உங்களை இன்று ஸ்திரமான ஆரோக்கியத்துடன் வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -08.10.2024




எதிர்பாராத நிகழ்வுகள் நடக்கும். விஷயங்களை வேறு விதமாக அணுகுவது நல்லது. பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பணிச் சூழல் சவாலானதாக இருக்கும். பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளது. இதனை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறையை கையாள்வீர்கள். அவருடன் நீங்கள் அன்பு பாராட்டி பழகுவீர்கள். இது ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கும்.

நிதிவளர்ச்சி இன்று சிறப்பாக காணப்படும். கடின முயற்சி மூலம் தான் நீங்கள் பலனை அதுவும் தாமதமாகத் தான் அடைய முடியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நல்ல ஆரோக்கியத்தை தக்க வைத்துக் கொள்ள தியானம் மேற்கொள்வது நல்லது.




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதி நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாக காணப்படும். நன்கு திட்டமிட்டால் பணத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

தோள் வலியால் பாதிக்கப்படுவீர்கள். முறையான உடற்பயிற்சி ஆறுதலைத் தரும்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையயை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்ப உறவில் அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது.

இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்




இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரிகட்டிவிடலாம்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். திட்டமிட்டு பணத்தை சேமிப்பது நல்லது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படலாம். பொறுமையுடன் இருங்கள். யோகா செய்யுங்கள்.





